அறம் வளர்த்த அன்றைய பாண்டிய மன்னர்களின் ஒருமித்த இளவல் மாதிரி கம்பீரமாகக் காட்சியளித்தார் தேவர் திருமகன். - பேரறிஞர் அண்ணா

வீரராகவே பிறந்தார் வீரராக வாழ்ந்தார் வீரராக மறைந்தார் வீரராகவே மறைந்த பிறகும் போற்றப்படுகிறார் - முத்தமிழ் அறிஞர்

தியாகத்தின் திரு உருவம் தேன் தமிழின் இனிய குரல் அருட்பாவின் அருள் வடிவம் தேவர் திருமகனாரை போற்றுவோம் - வே.தங்கபாண்டியன்

அத்தகைய பசும் பொன்னாரை போற்றுவோம் அத்தகைய பசும்பொன் தேவரை போற்றுவோம் - முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்

பசும்பொன் தேவரே தட்சிண போஸ் தென்னாட்டு போஸ் எனக்கு மறு பிறப்பு என்று ஒன்று இருந்தால் தமிழனாகவே பிறக்க விரும்புகிறேன்
1943இல் இம்பால் போர் முனையில் ஐ.என்.ஏ. வீரர்கள் மத்தியில் - நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

போற்றிப் பாடடி பெண்ணே! தேவர் காலடி மண்ணே! அப்பாடலில் என் ஆன்மாவைப் பெய்தேன்! அப்பழுக்கற்ற
அப்பெரு மகனுக்கு என் ஆராதனையை அனனம் செய்தேன் - கவிஞர் வாலி

மூவேந்தர் வீரமெல்லாம் மொத்தமாய்ச் சேர்ந்த உள்ளம் நாவேந்தும் சொற்கள் எல்லாம் நதி போல விரைந்து செல்லும்.
பாவேந்தர் உலகம் எல்லாம் பசும்பொன்னைப் பாடி செல்லும் பூவேந்தி வாழ்த்துகிறேன் புகழ் மைந்தன் பாதம் தொட்டு - கவிஞர் வைரமுத்து.

இல்லறம் இல்லை ஆனால் ஏற்காத அறமே இல்லை நல்லறம் வளர்த்துக் காத்த எங்கள் நற்றமிழ் முத்து ராமலிங்கம்
பாவலர் எழுதின் மேல் பாடினர் அவருக்கென்று கோவிலே எழுப்பினாலும் குறையொன்று சொல்வார் இல்லை காவலன்
பசும்பொன் நாதன் காலத்தால் வாழ்க மாதோ! - கவிஞர் கண்ணதாசன்

பசும்பொன்தேவர் இல்லத்தை 10 லட்சம் செலவில் புதுப்பித்தது
9 லட்சம் செலவில் நூற்றாண்டு நினைவு வளைவு
4 லட்சம் செலவில் நூலகம்
9 லட்சம் செலவில் புகைப்படக் கண்காட்சி
5 லட்சம் செலவில் முளைப்பாரி மண்டபம் மற்றும்
நினைவாலயத்தைச் சுற்றி கல் சாலைகள் அமைத்தது
பசும்பொன்னார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு
சுமார் 2 கோடியே 5 லட்சம் செலவில் ஆன பல பணிகள்
நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது.

தேவர் ஜெயந்தி விழாவில் கூட்ட நெரிசலைத் தடுக்கவும்
வெயில் மற்றும் மழையிலிருந்து பொதுமக்களைப்
பாதுகாக்கவும் பசும்பொன் தேவர் பெருமானார் நினைவிடத்தில்
ஒரு கோடியே 5 லட்சம் செலவில் தெய்வத்திருமகனார்
முத்துராமலிங்கத் தேவர் அரங்கத்தை கடந்த ஆண்டு
திறந்து வைத்தார்கள்
கழகத் தலைவர் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

இந்த ஆண்டு பசும்பொன்னில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில்
தேவர் திருமகனார் பெயரில் திருமண மண்டபம் அமைக்கப்படும் என அறிவித்த

கழகத் தொண்டர்களின் அண்ணன்

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்

அவர்களுக்கு நன்றி, நன்றி, நன்றி

இவண்

காரியாபட்டி சித்தனேந்தல்

கூத்தன்சேதுபதி பால்சாமி அக்கிகணேசன்

(எங்கள் ஊருக்கு எங்கள் இல்லத்திற்கு நான் மிகச் சிறுவனாக இருந்த போது வந்த தேவர் திருமகனார், தன் மடியில் அமர்ந்திருந்த என்னைக் காட்டி
ஏண்டா பால்சாமி இவன்தான் உன் மகன் கருப்புச் சட்டைக் காரனா என்று கேட்டதும், என் தந்தை சிரித்துக் கொண்டே ஆம் என்றதும்,
இன்றும் என்றும் நினைவில், மனதில்,நின்று நிழலாடிக் கொண்டே இருக்கிறது..., அக்கி)